Chapter XXIII Code of Criminal Procedure
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

**CC No.215/2019**

Deposition of Witness **PW 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சிவராமன் | Caste | : | |
| Father Name | : | | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.06.2022.

**முதல் விசாரணை**

நான் சேலம் மாவட்டம் மேட்டுரில் குடியிருந்து வருகிறேன். நான் சமூகப்பணி செய்து வருகிறேன். ஆஜர்எதிரிகளை எனக்கு தெரியும். பெருமாள் மற்றும் ஹரிபாபு (எ) நரிக்கண்ணன் ஆவார். நான் அருந்ததியர் இனத்தை சேர்ந்தவன் மேற்படி மக்களுக்காக விழிப்புணர்வு செய்துவருகிறோம். ஆதி தமிழர் பேரவையில் தற்போது மாநில தொண்டர் அணி செயலாளராக பொறுப்பில் உள்ளேன். கடந்த 2011 ம் வருடம் மேற்படி 1ம் எதிரி பெருமாள் என்பவர் எனக்கு அறிமுகம் ஆனார். அவர் அருந்ததியர் சமூகத்தை சார்ந்தவர். அவர் தன்னிடம் தமிழக முதல்வர் அவர்களின் உதவியாளர் அவர்களை எனக்கு நன்றாக தெரியும் என்று சொன்னார். மேற்படி 1ம் எதிரி என்னை அப்போதைய அமைச்சர் எடப்பாடி பழனிசாமி அவர்கள் அலுவலகத்திற்கு ( தலைமை செயலகம்) அழைத்து சென்றார். அங்குள்ள அவரின் உதவியாளரிடமும் பேசினார். மீண்டும் என்னை சேப்பாக்கத்தில் பிரைமரி லாட்ஜ்க்கு அழைத்து சென்றார். நாங்கள் 5 பேரும் சேர்ந்து மேற்படி லாட்ஜ்க்கு சென்றோம் எங்களிடம் நர்ஸ் மற்றும் விஏஓ பணிகள் வாங்கிதருவதாக சொல்லி தலா 4 நபர்களுக்கு 2 லட்சம் என பேசி முன்பணமாக ஒரு லட்சம் (1,00,000X4 = 4,00,000) பெற்றார். பணம் கொடுத்து 3 மாதங்கள் கடந்துவிட்டது. நான் எதிரிகளிடம் ஏன் இன்னும் வேலை வரவில்லை என கேட்டேன். அவர் அதற்கு எனக்கு தெரியாது என்றும், தலைமைசெயலகத்தில் உள்ள உதவியாளரிடம் கேட்குமாறு தெரிவித்தார். நான் எதிரிகளை பற்றி விசாரித்த போது எங்களிடம் பணம் பெற்றது போல் பல நபர்களிடம் பணம் பெற்றது தெரியவந்தது. மேலும் எதிரிகள் 1 மற்றும் 2 என்னிடம் பணம் பெற்றது போல் பல நபர்களிடம் பெற்றதாக தெரியவந்தது. நான் 1ம் எதிரி பெருமாளிடம் கேட்டபோது அவர் 2ம் எதிரி ஹரிபாபு என்பவரிடம் கேட்குமாறும் மற்றும் தலைமை செயலக உதவியாளரிடம் கேட்குமாறு தெரிவித்தார். பின்பு பேச்சுவார்த்தை முற்றியதால் 16.06.2012 ம் தேதி அரச்சலூர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். மேற்சொன்ன தேதிக்கு 2 நாட்கள் முன்பாகவே புகார் கொடுக்க சென்றபோது புகார் எடுக்கவில்லை. பின்பு புகாரை வாங்கி வைத்துகொண்டு 1ம் எதிரியை அழைத்து வர ஆள் அனுப்பினார்கள். பணம் திருப்பி தருவதாக 1வது எதிரி காவல்நிலையத்தில் எழுதி கொடுத்தார். வழக்கறிஞர் 1வது எதிரியுடன் வந்தார். காவல்நிலையத்தில் எழுதிகொடுத்து மறுநாள் வருவதாக சொல்லி அழைத்து

சென்றுவிட்டார். சொன்னதுபோல் மறுநாள் காவல்நிலையம் வராததாலும், **1**ம் எதிரியின் செல்போன் சுவிட்ச் ஆப் செய்திருந்ததாலும் நான் இது குறித்து தேதி எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. மாவட்ட கண்காணிப்பு அலுவலகத்தில் புகார் கொடுத்தேன். மேற்படி **புகார் அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை நகலை எங்களுக்கும் கொடுத்தார்கள். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 மற்றும் 2ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் மின்சார வாரியத்தில் பகுதி நேர பணியாளராக பணிபுரிந்துவருகிறேன் எனக்கு மாத வருமானம் ரூ.10,000/- ஆகும். மேற்படி நான் வருமானம் பெறுவதற்கு மின்சார வாரியத்தில் கணக்கு உள்ளது. நான் மின்சார வாரியத்தால் நியமணம் செய்யப்பட்டு வேலை செய்துவருகிறேன்.மேற்படி ரூபாய் 4 லட்சம் பணம் உங்களுடையது இல்லை என்றால் சரிதான். என்னுடைய அறிமுகத்தால் தான் மேற்படி 4 நபர்களும் பணம் கொடுத்தார்கள். மேற்படி 1வது எதிரியும் நீங்கள் இருக்கும் ஆதி தமிழர் பேரவையில் உறுப்பினர் என்றால் சரியல்ல. மேற்படி நீங்கள் கொடுத்ததாக சொல்லப்படும் பணத்தை காசோலை, வங்கி மூலமாக செலுத்தவில்லை என்றால் சரிதான். ரொக்கமாக கொடுத்தோம். நீங்கள் பணம் கொடுத்தபோது யாரும் இல்லை என்றால் சரியல்ல. நான், மாவட்ட செயலாளர் வீரகோபால், பணம் கொடுத்த 4 நபர்கள் மற்றும் எதிரிகள் 2 பேர் மொத்தம் 8 பேர் இருந்தோம். நீங்கள் எதிரிகளிடம் இருந்து பணம் கொடுத்தற்கான எந்த ஆவணமும் எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான். மேற்படி 16.06.2012 ம் தேதி அரச்சலூர் காவல்நிலையத்தில் எதிரிகள் மீது கொடுத்த புகாரை இவ்வழக்கில் போலீசார் கொடுத்தீர்களா என்றால் இல்லை ஆனால் தற்போது அரச்சலூர் காவல்நிலையத்தில் புகார் இருக்கும். மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் எங்களை விசாரித்தபோது மேற்படி அரச்சலூர் காவல்நிலையத்தீல் கொடுத்த புகாரை குறிப்பிட்டு சொன்னோம். மேற்படி 1வது எதிரி அரச்சலூர் காவல்நிலையத்தில் பணம் திரும்ப தருவதாக எழுதிகொடுத்ததாக சொல்லப்படும் ஆவணத்தை இவ்வழக்கு விசாரணையின் போது புலன்விசாரணை அதிகாரிகளிடம் தெரிவித்தீர்களா என்றால் அது குறித்து தெரிவிக்கவில்லை ஆனால் மாவட்ட கண்காணிப்பாளரிடம் சொன்னோம். நீங்கள் சொல்வது போல் 1வது எதிரி அரச்சலூர் காவல்நிலையத்தில் பணம் தருவதாக எந்த ஆவணமும் எழுதிதரவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. மேற்படி எதிரிகள் உங்களிடம் இருந்து எந்த பணமும் பெறவில்லை என்றும், நீங்கள் ரூபாய் 4 லட்சத்தை பெற்றுக்கொண்டு எதிரிகள் பெற்றுக்கொண்டதாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. நான் அரச்சலூர் காவல்நிலையத்தில் கொடுத்த புகாரில் பெருமாள் மற்றும் ஹரிபாபு வை சேர்த்து தான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நீங்கள் சொன்னது போல் எதிரிகள் உங்களிடம் அல்லது உங்கள் மூலமாக யாரிடம் இருந்து பணம் பெறவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் சொல்வதுபோல் ரூபாய் 4 லட்சத்தை கொடுத்திருந்தால் அதற்குண்டான குறைந்தபட்ச ஆதாரமாவது பெற்றிருப்பிர்கள் என்றும், அவ்வாறு பணம் கொடுக்காததால் தான் எந்த ஆதாரமும் இல்லை என்றால் சரியல்ல. நீங்கள் மேற்படி நபர்களிடம் இருந்து ரூபாய 4 லட்சத்தை பெற்றுக்கொண்டும் 1வது எதிரிக்கு கொடுத்ததாகவும்,

மேற்படி நபர்களுக்கு பணத்தை நீங்கள் திரும்ப செலுத்தாமல் இருப்பதற்காக 1 வது எதிரிக்குகொடுத்தாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Chapter XXIII Code of Criminal Procedure
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

**CC No.215/2019**
Deposition of Witness **PW 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தேவராஜ் | Caste | : | |
| Father Name | : | | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions
of Act X of 1873 of the day of 13.06.2022.

**முதல் விசாரணை**

நான் சேலம் மாவட்டம் மேட்டூரில் குடியிருந்து வருகிறேன். நான் கார் டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் இருவரையும் எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் பெருமாள் மற்றும் ஹரிபாபு(எ) நரிகண்ணன் ஆவார்கள். நான் அருந்ததியர் இனத்தை சார்ந்தவன். கூட்டத்திற்கு வரும் வகையில் நான் அ.சா.1 உடன் இருந்தபோது எதிரிகள் இருவரும் வந்து எங்களுக்கு அறிமுகமானார்கள். நம்முடைய சமூகத்திற்கு நிறைய வேலை வாய்ப்புகள் உள்ளது எனவும், சலுகைகள் உள்ளது எனவும் ஏன் பயன்படுத்திகொள்ளாமல் உள்ளீர்கள் என்று கேட்டார்கள். நான் அதற்கு தனக்குஒன்றும் தெரியாது என தெரிவித்தேன். இவ்வழக்கின் 1ம் எதிரி பெருமாள் எனக்கு முதலமைச்சரின் 13வது உதவியாளர் என தெரிவித்தார். எனக்கும், என் மனைவிக்கும் வேலை வாங்கித்தருவதாக தெரிவித்தார். எனக்கு கிராம நிர்வாக அலுவலர் பணியும், என் மனைவிக்கு செவிலியர் பணி வாங்கித்தருவதாக 1வது எதிரி தெரிவித்தார். 1வது எதிரி சீக்கிரம் பணம் தரவேண்டும் என்றும், தற்போது பணிகள் நிரப்பப்பட்டு வருவதாக தெரிவித்தார். 2011ம் வருடம் 8வது மாதம் தேதி ஞாபகமில்லை. தலைமை செயலகத்திற்கு (சென்னை) எதிரிகள் என்னை அழைத்து சென்றார்கள். உடன் நான், என் மனைவி, அ.சா.1, பட்டியல் சாட்சி ஜெயா மற்றும் ஆனந்தி சென்றோம். தலைமை செயலகத்திற்கு உள் செல்ல ரசீது பெற்று அழைத்து சென்றார்கள். அமைச்சர்களின் அறையை எனக்கு காண்பித்தார். மேற்படி அங்கிருந்த நபர்கள் 2வது எதிரி ஹரிபாபுவை பார்த்து அங்கிருந்த நபர்கள் வணக்கம் வைத்தார்கள். அதை பார்த்து மேற்படி 2வது எதிரியை உண்மையாக உதவியாளராக இருப்பார் என நம்பினேன். பின்பு தலைமை செயலகத்திலிருந்து வெளியே வந்தோம். ஏற்கனவே ஒருவருக்கு தலா ரூபாய் 2 லட்சம்எ ன பேசினார்கள். முன்பணமாக ரூபாய் ஒரு லட்சம் தருவதாக தெரிவித்தோம். மேற்படி பணத்தை எடுத்துகொண்டு தான் சென்னை சென்றோம். பின்பு தலைமை செயலகத்திலிருந்து வெளியே வந்து 2 எதிரிகளும் அழைத்து 2 எதிரிகளும் தங்கியிருந்த லாட்ஜ் (பிரைமார்க்)க்கு சென்றோம். நான் 1வது எதிரியிடம் எனக்காகவும், என் மனைவிக்காகவும் ஆளுக்கொரு ஒரு லட்சம் என 2லட்சம் கொடுத்தேன். என்னுடன் வந்த ஜெயா மற்றும் ஆனந்தி தலா ஒரு லட்சம் என மொத்தம் ரூபாய் 4 லட்சம் 1ம் எதிரியிடம் கொடுக்கப்பட்டது. அப்போது 2வது எதிரி உடன் இருந்தார். எங்களிடம் 3

மாதங்களில் வேலை வரும் என தெரிவித்தார் எனவே நாங்கள் அருகிருந்து சென்றுவிட்டோம். 3 மாதங்கள் கழித்து வேலை கிடைக்காததால் எதிரிகளிடம் சென்று கேட்டோம். அவர்கள் வேலை வந்து விடும் என தெரிவித்தார்கள். ஒரு வருடம் கழிந்துவிட்டது. அ.சா.1 மூலமாக புகார் கொடுக்கலாம் என அரச்சலூர் காவல்நிலையம் சென்று அ.சா.1 புகார் கொடுத்தார் நான் உடனிருந்தேன். புகார் கொடுத்து வந்துவிட்டோம். அதன் பின்னர் ஈரோடு காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வந்து புகார் கொடுத்ததன் பேரில் ஈரோடு மாவட்ட குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரித்து என் வாக்குமூலத்தை பதிவு செய்தார்.

**1 மற்றும் 2 ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

**அ.சா.1** ன் மீதுவைத்த நம்பிக்கையின் பேரில் தான் மேறபடி எதிரியிடம் பணத்தை கொடுத்தீர்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் கூட்டத்தில் என்னிடம் அறிமுகமாயினார்கள் அப்போது என் கைப்பேசி நம்பரை வாங்கிகொண்டார்கள். நான் ஆதி தமிழர் பேரவை கூட்டத்திற்கு செல்வேன் அங்கு எதிரிகளும் வருவார்கள் அவ்வகையில் எதிரிகள் எனக்கு பழக்கம். நீங்கள் தலைமை செயலகம் உள்ளே செல்லும்போது பணம் கொண்டு சென்றீர்களா என்றால் உள்ளே செல்லும்போது பணம் கொண்டுசெல்லவில்லை அப்போது காரில் பணம் இருந்தது. தலைமை செயலகம் உள்ளேசென்று திரும்பவந்தபோது தான் ஒரு நபருக்கு எவ்வளவு பணம் என்று சொன்னார் என்றால் சரியல்ல ஏற்கனவே சொல்லியிருந்தார். அ.சா.1 மூலமாக தான் எதிரிகள் பழக்கம் என்றால் சரியல்ல. அ.சா.1 உடன் நானும் இருப்பேன் இருவருக்கும பழக்கமானார்கள். நீங்கள் எதிரிகளுக்கு பணம் கொடுத்தாக சொல்லப்படும் போது எந்த ஆவணமும் எழுத்துமூலமாக பெற்றுகொள்ளவில்லை என்றால் சரிதான். நான் பணத்தை காசோலை, டிடி மூலமாக கொடுக்ககவில்லை. ரொக்கமாக தான் கொடுத்தேன். நான் பத்தாம் வகுப்பு வரை தான் படித்துள்ளேன். மேற்படி விஏஓ மற்றும் நர்ஸ் பணிகளுக்கு தேர்வாணையம் மூலம் பணிகள் நிரப்பப்படும் என்பது உங்களுக்கு தெரியும் என்றால் எனக்கு தெரியாது. நீங்கள் எதிரிகளுக்கு பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றும் அவ்வாறு பணம் கொடுத்திருந்தால் ஆவணம் பெற்றிருப்பீர்கள் என்றால் சரியல்ல. வேலைக்கு கிடைத்துவிடும் என்றும், கஷ்டத்தில் இருந்து மீண்டுவிடலாம் என்ற நம்பிக்கையில் எதையும் பெற்றுக்கொள்ளாமல் பணம் கொடுத்தேன். நீங்கள் ரூபாய் 2 லட்சம் எவ்வாறு சேர்த்தீர்கள் என்றால் நான் ஊரில் உள்ள நபர்களிடம் ரூபாய் 10,000/-, 20,000/- என கடன் வாங்கி தான் 2 லட்சம் கொடுத்தேன். நீங்கள் சொன்னது போல் எந்த பணமும் கொடுட்ககவில்லை என்றும் நீங்கள் 2 லட்சம் கொடுப்பதற்கு பொருளாதார வசதி இல்லை என்றால் சரியல்ல. நீங்கள் பணம் பெற்றதாக சொல்லும் நபர்கள் இவ்வழக்கில் உங்களுக்காக சாட்சி சொல்வார்களா என்றால் 2, 3 நபர்கள் உள்ளார்கள் வருவார்களா என்று எனக்கு தெரியவில்லை. நீங்கள் எதிரிகளிடம் நேரடியாக எந்த பணமும் தரவில்லை என்றும், அ.சா.1 னிடம் பணம் கொடுத்துவிட்டு இவ்வாறு புகார் கொடுத்தார் பணம் கொடுத்துவிடுவார்கள் என்று அ.சா.1 க்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் பணம் கொடுத்தாக சொல்லப்படும் இடம் சென்னை காவல்நிலைய எல்லைக்குள் உட்பட்ட இடம் என்பதால்

இவ்வழக்கை அங்கு தான் தாக்கல் செய்யவேண்டும் என்றால்சரியல்ல. நீங்கள் முதல் விசாரணையில் சொல்வது போல் வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மமந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**